## தலைப்பு 198 – நீர்ப்பாசன அமைச்சு

### 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

நீர்ப்பாசன அமைச்சின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) ஆம் பிரிவின் பிரகாரம் நீர்ப்பாசன அமைச்சின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2021 யூன் 29 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) ஆம் பிரிவின் பிரகாரம் அமைச்சிற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2021 யூலை 30 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தை தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நீர்ப்பாசன அமைச்சின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல், மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்க கூடிய வகையில் உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் அமைச்சால் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக உரிய வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகளை பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் அமைச்சின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டியிருந்ததுடன் அம்முறைமையின் செயற்திறன் தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நிமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால்

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு அமைச்சின் உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமானதன்மை தொடர்பாக அபிப்பராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும் நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான கொடுக்கல் வாங்கல்கள் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும்

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது எனவும்,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டிருந்தது.

**1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

**1.6.1 காசுப் பாய்ச்சல் கூற்று**

**(அ) மீண்டெழும் செலவினம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | காசுப் பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளின் கீழ் ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்கள் ரூபா 100,036,149 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும், அப்பெறுமதி ரூபா 6,355,033,487 ஆக இருந்தமையினால் செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 6,254,997,338 தொகை அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | பரீட்சை மீதியின் பிரகாரம் ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினமாக ரூபா 100,036,149 தொகை அட்டவணை இலக்கம் 01 இன் பிரகாரம் கணிப்பீடு செய்யப்பட்டிருந்தது. ரூபா 6,257,018,350 தொகையான பௌதீக சொத்துக்கள் நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீட்டு கைப்பற்றல்களாக இருந்தமையினால் ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்களில் உள்ளடக்கப்படவில்லை. | செயற்பாட்டு நடவடிக்கைகளில் இருந்து உருவான தேறிய காசுப் பாய்ச்சல் சரியாக காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ii) | மானிய மாற்றல்கள் ரூபா 10,314,847 ஆக இருந்த போதிலும், காசுப் பாய்ச்சல் கூற்றில் ரூபா 10,423,489 ஆக காண்பிக்கப்பட்டமையினால் ரூபா 108,642 தொகை செயற்பாடுகள் மற்றும் மானிய மாற்றல்கள் நிதிக் கூற்றில் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | காசுப் பாய்ச்சல் கூற்றில் ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்களில் உள்ளடக்கப்பட வேண்டிய ரூபா 108,642 தொகை தவறுதலாக மானிய மாற்றல்களில் உள்ளடக்கப்பட்டமையால் ஆளணி வேதனங்கள் மற்றும் செயற்பாட்டு செலவினங்கள் அப்பெறுமதியால் குறைத்து, மானிய மாற்றல்கள் அப்பெறுமதியால் அதிகரித்து ஒட்டு மொத்த செலவினம் அதன் மூலம் சீராக்கப்பட்டுள்ளது. | நிதிக் கூற்றுக்களில் காசுப் பாய்ச்சல்கள் சரியாக காண்பிக்கப்பட வேண்டும். |

**(ஆ) மூலதன செலவினம்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு செயற்பாடுகளின் கீழ் பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகளை கைப்பற்றல்கள் ரூபா 6,257,018,350 ஆக காண்பிக்கப்பட்ட போதிலும், திறைசேரி குறிப்பின் பிரகாரம் ரூபா 2,221,417 ஆக இருந்தமையால் முதலீட்டு செயற்பாடுகளில் இருந்து உருவான தேறிய காசுப் பாய்ச்சல் ரூபா 6,254,796,933 தொகை குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | பரீட்சை மீதியின் பிரகாரம் பௌதீக சொத்துக்களை நிர்மாணித்தல் அல்லது கொள்வனவு செய்தல் மற்றும் ஏனைய முதலீடுகளை கைப்பற்றுதல் ரூபா 6,257,018,350 ஆக இருந்ததை குறிப்பிடுகின்றோம். | திறைசேரி குறிப்பின் பிரகாரம் இணக்கம் செய்து சரியான பெறுமதியைக் காண்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.2 நிதி நிலைமைக் கூற்று**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிநிலைமைக் கூற்றில் ஆதனங்கள், பொறிகள் மற்றும் உபகரணங்களின் ஆரம்ப மீதி ரூபா 432,177,817 ஆக இருந்த போதிலும், கணக்குகளுடன் சமர்ப்பிக்கப்பட்ட நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ஏ.சீ.ஏ.06) ரூபா 432,588,643 ஆக காண்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 410,826 தொகையான வேறுபாடு காணப்பட்டது. | நிதி நிலைமைக் கூற்றின் மீதிகள் சரியாக இருந்ததுடன், 9152 சொத்து தொகுதிகளின் கீழ் நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான கூற்றில் (ஏ.சீ.ஏ.06) ஆரம்ப மீதி இரு தடவை கணிப்பிடப்பட்டிருந்தமையை ஏற்றுக் கொள்கின்றோம். | நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது ஒப்பீட்டு ரீதியில் பரீட்சித்து சரியான தகவல்களை உள்ளடக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**1.6.3 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணிச் செல்லப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| **பொறுப்புப் பதிவேடு**<br>நிதிப் பிரமாணம் 214 இன் பிரகாரம் பொறுப்பு பதிவேடொன்று பேணிச் செல்லப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த பதிவேட்டை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என அறியத்தருகின்றோம். | பொறுப்பு பதிவேட்டை பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

---

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

---

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் இராஜாங்க அமைச்சினால் நிறைவேற்றுவதற்கு திட்டமிடப்பட்ட பணிகளுக்காக ரூபா 8,585,372,000 தொகையான கட்டுநிதி கோரப்பட்டிருந்த போதிலும், திறைசேரியினால் ரூபா 6,589,060,136 தொகை விடுவிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் கோரப்பட்ட கட்டுநிதியில் 23 சதவீதம் கிடைத்திருக்கவில்லை. | 2020 ஆம் ஆண்டின் சனவரி முதல் திசெம்பர் வரை கோரப்பட்ட கட்டுநிதிகளில் கிடைத்த அளவு 77 சதவீதம் ஆக இருந்ததை ஏற்றுக் கொள்கின்றோம். | பாதீட்டு கட்டுப்பாடு முரண்களை குறைக்கும் வகையில் எதிர்வுகூறி மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 2.2 செலவின முகாமைத்துவம்

---

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) 03 செலவின தலைப்பிற்காக ஒதுக்கப்பட்ட மொத்த தேறிய நிதிஏற்பாடான ரூபா 1,300,000 தொகை பயன்படுத்தப்படாமல் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தன. | இந்த ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்பட்ட போதும் ஆண்டின் இறுதி வரையிலும் உலகம் முழுவதும் காணப்பட்ட கொவிட் - 19 தொற்று நோயின் அடிப்படையில் வெளிநாட்டு பிரயாணங்கள் மேற்கொள்ளாமை, ஆதன வரி சிட்டைகள் சரியான பிரகாரம் கிடைக்காமையின் அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளாமை, 10 இயந்திர உபகணங்களின் பயன்பாடு குறைவடைந்தமை போன்ற விடயங்கள் காரணமாக இருந்தன. | நிதி ஏற்பாட்டை பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மதிப்பீடு தயாரிக்கும் போது தேவையினை இனங்காணமல் ஒதுக்கப்பட்டமை மற்றும் திட்டமிடப்பட்ட பிரகாரம் வேலை நடவடிக்கைகள் மேற்கொள்ளாமை போன்ற காரணங்ளினால் 10 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 20,125,000 கூட்டுத் தொகையான தேறிய நிதிஒதுக்கீடுகளில் கூட்டு மொத்தமாக ரூபா 8,698,120 தொகை அதாவது, 43 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது. செலவின விடயத்தின் கீழ் சேமிப்பு 20 சதவீதத்திற்கும் 96 சதவீத்திற்கும் இடையிலான வீச்சினை கொண்டிருந்தது. | கொவிட் - 19 நிலைமையின் காரணமாக அலுவலகத்தை மூடவேண்டியிருந்தமை மற்றும் சுழற்சி முறையில் உத்தியோகத்தர்களை சேவைக்கு வரவழைத்தமையின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்ட பிரகாரம் செலவினங்கள் ஏற்படவில்லை. | ஒதுக்கப்பட்ட நிதி ஏற்பாட்டை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.3 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளுக்கு உடன்படல்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சுற்றிக்கையின் ஆலோசனையின் பிரகாரம் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கடப்பாடுகள் மற்றும் பொறுப்புக்களின் அளவு அரச கணக்குகள் திணைக்களத்தினால் பராமரிக்கப்பட்ட தகவல் முறைமையை நாளாந்தம் நாளதுவரையாக்குவதற்காக சகல செலவின அலகுகளினாலும், கடப்பாடுகள் பொறுப்புக்கள் மற்றும் அந்த பொறுப்புக்களை விடுவித்தல் தொடர்பான தகவல்கள் அந்த இணைய தளத்திற்கு உள்ளீர்க்கப்பட வேண்டியமைக்கு (Up lord) ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், அதற்கு இணங்க அந்த தகவல்கள் நாளது வரையாக்கப்பட்டிருக்கவில்லை. | நீர்ப்பாசன அமைச்சின் கீழ் உள்ள 15 செயற்திட்டங்களில் 02 செயற்திட்டங்கள் மாத்திரம் CIGAS முறைமை மற்றும் கணக்கீட்டு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றமையினால் செயற்திட்டங்களின் பொறுப்புக்கள் மாதாந்தம் சேகரிக்கப்பட்டு மாதாந்த கட்டுநிதி பெறுவதற்கு திறைசேரி செயற்பாடுகள் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றது. நீர்ப்பாசன அமைச்சின் ITMIS முறைமையின் பிரகாரம் கணக்குகள் வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமையினால் இந்த பிரச்சினை தீர்க்கப்பட்டுள்ளது. | அரச கணக்குகள் சுற்றறிக்கை இலக்கம் 255/2017 இற்கு இணங்க பொறுப்புக்கள் தொடர்பான அறிக்கை தயாரிக்கப்பட வேண்டும். |

## 2.4 முற்பண கணக்கு மீதி

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கடன் பணம் செலுத்தி முடிவுறுத்துவதற்கு முன்னர் ஓய்வு பெற்றுச் செல்லல் அல்லது மரணமடைதல் அல்லது சேவையை முடிவுறுத்தல் அல்லது உத்தியோகத்தர்களுக்குரிய கடன் மீதி தொடர்பாக தாபன விதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.2, 4.2.4, 4.2.5, 4.3, 4.4, 4.6 மற்றும் 6.3 ஆம் பிரிவுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அதன் காரணமாக 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 1,443,234 தொகை அறவிடப்படாத கடன் மீதியொன்று காணப்பட்டது. | இந்த மீதி 2021 ஆம் ஆண்டின் போது தீர்த்து வைப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளதுடன், அறவிட முடியாத மீதியை பதிவழிப்பதற்கு அரச நிதி திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது. அறவிட முடியாத கடன் மீதியை அறவிடல் தொடர்பாக சட்டமா அதிபருக்கு சமர்ப்பித்ததன் பின்னர் அந்த மீதியை சட்டரீதியான நடவடிக்கைகளில் அறவிடுதல் ஆக்கபூர்வமானதாக இல்லாதிருந்தமையினால் அந்த மீதியை பதிவழிப்பதற்காக அரச நிதி திணைக்களத்திற்கு அனுப்புமாறு சட்டமா அதிபர் திணைக்களம் அறிவித்திருந்தமையினால் அதன் பிரகாரம் பதிவழிப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | தாபன விதிக் கோவையின் ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.5 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களின் ஏற்பாடுகளுடன் இணங்காமைகள் கீழே பகுப்பாய்வு செய்து காண்பிக்கப்படுகின்றது.

| அவதானிப்புக்கள் | | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு** | **இணங்காமைகள்** | | |
| (அ) இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை | | | |
| (i) நிதிப் பிரமாணம் 134(2) | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் ஆண்டின் ஆரம்பத்தின் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடியதன் பின்னர் உள்ளக கணக்காய்வு திட்டம் தயாரிக்க வேண்டிய போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த கணக்காய்வு திட்டம் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன், 2021 ஆம் ஆண்டிற்குரிய கணக்காய்வு திட்டத்திற்காக 2021 இன் முதலாவது காலாண்டில் நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. | உள்ளக கணக்காய்வு திட்டம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் இணக்கப்பாட்டை பெற்று தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) நிதிப் பிரமாணம் 571(2)(3) | நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் பரீட்சிக்கப்பட்டு காலாவதியான வைப்புக்களை வருமானத்திற்கு எடுக்க வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | இரண்டு வருடங்களை விஞ்சிய ஒரு ஒப்பந்த காரருக்குரிய ரூபா 1,251,774 தொகையான வைப்புக்கள் காணப்பட்டதுடன், ஏனைய ஒப்பந்தகாரரின் மூலம் அந்த ஒப்பந்தத்தை பூர்த்தி செய்வதற்கு | வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டிருந்தமையினால் அரசாங்கத்தின் வருமானத்தில செலவு வைக்கப்படவில்லை. | |
| (ஆ) | 2014 மே 11 ஆம் திகதிய 171/2004 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கை | அரசாங்கத்தின் சம்பள மென்பொருள் தொகுதியை பயன்படுத்தும் போது கணக்காளரின் கட்டுப்பாட்டின் கீழ் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | அரச கணக்குகள் திணைக்களத்துடன் சேர்ந்து அந்த முறையினை மாற்றுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றது | கணக்காளரின் கட்டுப்பாட்டின் கீழ் அமுல்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | 2016 திசெம்பர் 29 ஆம் திகதிய 2106/30 ஆம் இலக்க அரச நிர்வாக சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | வாகனங்களின் எரிபொருள் எரிவு மீண்டும் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் எரிபொருள் எரிவு மீண்டும் பரீட்சிக்கும் நடவடிக்கைகள் காணப்பட்ட கொவிட் - 19 தொற்று நோய் நிலைமை முடிவடைந்த உடன் உடனடியாக மேற்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படும் என தயவுடன் அறியத்தருகின்றோம். | எரிபொருள் எரிவு சுற்றறிக்கையின் பிரகாரம் பரீட்சிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஈ) | இலக்கம் 05/2018 மற்றும் 05/2018(1) ஆம் இலக்க அரச நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் சுற்றறிக்கை | பிரஜை / சேவை பெறுனர் விஞ்ஞாபனம் ஒன்றை அடிப்படையாகக் கொண்டு அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை. | தற்போது ஏனைய பிரிவுகளில் உரிய தகவல்கள் கோரப்பட்டுள்ளது. எனினும் நாட்டில் காணப்படுகின்ற தொற்று நோய் நிலைமையின் காரணமாக இறுதிக் கட்டத்திற்கு வருவதற்கு முடியாதிருந்தது. அதன் பிரகாரம் பிரஜை / சேவை பெறுனர் விஞ்ஞாபனத்தை வழங்குதல் விரைவாக அமுல்படுத்துவற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | உரிய சுற்றறிக்கை ஏற்பாடுகளுக்கு இணங்க சேவை பெறுனர் விஞ்ஞாபனம் தயாரித்து செயற்பாட்டிற்கு கொண்டு வருதல் வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முன்னேற்றச் செயற்திட்டத்தின் பெறுகை பதிவேட்டில் 32.1 ஆம் பந்திக்கு இணங்க மாதிரிகளை தெரிவுசெய்து பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், ரூபா 42,494,417 தொகை செலவில் மூதூர் அல்லை உத்தேச திட்டத்தின் 02 இடது கரை கால்வாய் சுவரின் அடிப்படையிலான வீதி மற்றும் பிரதான வாய்க்கால் கட்டின் அடிப்படையிலான வீதி என்பன மண் நிரப்பி கிரவல் இட்டு அபிவிருத்தி செய்யும் போது அதற்காக பயன்படுத்தப்பட்ட மண் மற்றும் கிரவல் என்பன குறித்த நியமத்துடன் இருந்தமைக்கும் அவை குறித்த பிரகாரம் இயந்திரங்கள் மூலம் அமுக்கப்பட்டிருந்தமையும் தெரிவு பரிசோதனை அறிக்கை பெறப்பட்டிருக்கவில்லை. மேலும், இந்த வீதியில் மேற்கொள்ளப்பட்ட களப் பரிசோதனையின் போது உரிய வீதியில் மண் இட்டிருந்தும் மண் கழுவப்பட்டு சேறு நிரம்பியிருந்தமை அவதானிக்கப்பட்டது. | மண் மற்றும் கிரவல் தொடர்பாக மாதிரிப் பரிசோதனை அறிக்கை பெறப்பட்டு இந்த வாய்க்கால் கட்டின் அனுமதியற்ற மணல் லொறி பிரயாணம் செய்தமையினால் இந்த நிலைமையை கட்டுப்படுத்த முடியாத நிலைமை காணப்பட்டதுடன், அது தொடர்பாக மூதூர் பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தும் இது வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அனுமதியற்ற மணல் லொறி பிரயாணம் செய்கின்றமையினால் கணக்காய்வில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள பிரகாரம் வீதி உடைந்த நிலையில் காணப்படுகின்றமை திருகோணமலை நீர்ப்பாசன பணிப்பாளரினால் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.2 எதிர்பார்த்த பிரதிபலன்கள் (Outcome ) பெற்றுக் கொள்ளப்படாமை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அல்லை உத்தேச திட்டத்தின் தெற்கு முனையின் வீதி, கந்தளாய் வெந்திரசன் பிரதான வாய்க்காலின் பிரதான கால்வாய் வீதி மற்றும் பாக்கிரன் வெட் புதிய வீதி காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முன்னேற்றச் செயற்திட்டத்தின் கீழ் ரூபா 19,705,471 தொகை செலவில் அபிவிருத்தி செய்யப்பட்டிருந்தது. எனினும், மேற்குறிப்பிடப்பட்ட வீதிகளில் 400 மீற்றர், 2850 மீற்றர் மற்றும் 100 மீற்றர் முறையே ஏனைய அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் காப்பட் இடப்பட்டு கொங்கிரீட் இடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் இந்த வீதி அபிவிருத்திக்காக செயற்திட்டத்தின் கீழ் செலவிடப்பட்ட பணம் சிக்கனமற்ற செலவினமாக இருந்தது. | திருகோணமலை நீர்ப்பாசன பணிப்பாளரினால் சமர்ப்பிக்கப்பட்ட விளக்கமளித்தல்களின் பிரகாரம் இந்த வீதியின் அபிவிருத்தி வேலைகள் 2017 மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2018 யூன் மாதம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அதற்கு 21/2 வருட அளவிலான காலத்தின் பின்னர் அதாவது 2020 இன் நடுப்பகுதி அளவில் இந்த வீதியின் அருகில் குடியிருக்கின்ற மக்களின் கருணை வேண்டுகோளின் அடிப்படையிலும் நீர்ப்பாசன திணைக்களத்தின் அனுமதியின் அடிப்படையிலும் வீதியின் ஒரு பகுதி காப்பட் இடப்பட்டிருந்தது. | பூர்த்தி செய்யப்பட்ட வீதியின் பகுதியை மீண்டும் ஒப்பந்தத்தில் வழங்கும் நடவடிக்கைகள் செய்யமுடியாதிருந்ததுடன், அவ்வாறு மேற்கொண்டமை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | கந்தளாய் பேராறு வீதியில் ரூபா 468,285 தொகை செலவில் இரண்டு மதகுகள் நிர்மாணிக்கப்பட்ட போதிலும், உரிய பாதை இது வரை நிர்மாணிக்கப்படாமையின் காரணமாக அந்த இரண்டு மதகுகளும் இரண்டு வருடங்களாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இனங்காணப்பட்ட அதியரேதி விவசாய அமைப்பினால் இரண்டு மதகுகள் நிர்மாணிக்குமாறு கோரப்பட்டிருந்தமையும், அதற்குரிய வீதிகள் விவசாய அமைப்பின் நிதி மற்றும் ஊழிய பங்களிப்புடன் நிர்மாணிக்கப்படுவதாகவும் இணங்கப்பட்டிருந்தது. எனினும் கொவிட் 19 தொற்று நோயின் இடையே அவர்களின் நிதி சக்தி வீழ்ச்சியடைந்தமையினால் | ஒப்பந்தத்திற்குரிய வீதிகள் அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | விவசாயிகளுக்கு அதற்காக முன்வருவதற்கான காலம் காணப்படாதிருந்தமையின் அடிப்படையில் இந்த இரண்டு மதகுகளும் உரிய வீதியில் நிர்மாணிக்க முடியாதிருந்தது, அதன் காரணமாக இந்த இரண்டு மதகுகளும் இது வரை பயன்பாட்டிற்கு எடுக்க முடியாமல் காணப்பட்டது. | |

**3.3 செயற்திட்டம் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டமை**

---------------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நீர்ப்பாசன அமைச்சினால் அமுல்படுத்தப்பட்ட மஹாவலி இடது கரை அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் திருகோணமலை மாவட்டத்தில் கிண்ணியா மற்றும் கந்தளாய் பிரதேச செயலக பிரிவுகளில் 6000 ஏக்கர் காணிக்கு நீர்ப்பாசன நீரை வழங்குதல் மற்றும் 2 மில்லியன் கனமீற்றர் குடிநீரை வழங்குதல் என்பன செயற்திட்டத்தின் நோக்கமாகும். 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 134,955,993 தொகை செலவிடப்பட்டிருந்தது. இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிப்பட்டன. | | |

| | | | |
|---|---|---|---|
| (i) | நீர்ப்பாசன அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை குறிப்பின் பிரகாரம் இதற்காக தற்போது சாத்தியவள ஆய்வு மேற்கொள்ளப்பட்டு தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் (Department of National Planning) அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்காக ஐக்கிய அமெக்க டொலர் 90 மில்லியன் வெளிநாட்டு கடன் பெற்றுக்கொள்வதற்கான கடன் உடன்படிக்கை நிதி அமைச்சின் செயலாளரினாலும் சவுதி நிதியத்தின் முகவரினாலும் 2017 ஆம் ஆண்டின் ஒக்டோபர் மாதத்தின் போது கையொப்பமிடப்பட்டிருந்த போதிலும், கந்தளாய் சீனி தொழிற்சாலைக்குரிய காணியை கைப்பற்றும் போது ஏற்பட்டிருந்த பிரச்சினைகளின் காரணமாக வெளிநாட்டு கடன் பணம் பெறுதல் கைவிடப்பட்டிருந்தது. | கிண்ணியா பிரதேசத்தின் நீர்ப்பாசன மற்றும் குடிநீர் வழங்கும் நோக்கமாகக் கொண்ட செயற்திட்டம் அமைச்சு ஊடாக சவுதி நிதியத்தின் கீழ் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டமாகும். கந்தளாய் சீனி தொழிற்சாலைக்குரிய காணியை கைப்பற்றும் போது ஏற்பட்ட பிரச்சனையின் காரணமாக வெளிநாட்டு வள திணைக்களத்தில் நடைபெற்ற கலந்துரையாடல்களில் தீர்மானத்தின் பிரகாரம் வெளிநாட்டு கடன் பெறுதல் நிறுத்தப்பட்டு உள்நாட்டு நிதி மூலத்தின் மூலம் அமுல்படுத்துவதற்காக நீர்ப்பாசன திணைக்களத்திற்கு கையளிக்கப்பட்டுள்ளது. | செயற்திட்டங்களுக்குரிய காணியை கையேற்றல் கால ரீதியில் மேற்கொண்டு செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ii) | செயற்திட்டத்திற்குரிய சுற்றாடல் மதிப்பீட்டு அறிக்கை (EIA) செயற்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 04 வருடங்களை விஞ்சியிருந்த போதிலும், 2021 ஏப்ரல் 30 ஆம் திகதி வரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. | செயற்திட்டத்திற்குரிய சுற்றாடல் அறிக்கைக்காக நீர்ப்பாசன திணைக்களத்துடன் உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டிருந்ததுடன், அந்த அறிக்கை 2019 ஒக்டோபர் 28 ஆம் திகதி வனபாதுகாப்பு திணைக்களத்திற்கு வழங்கப்பட்டிருந்தது. அதன் முதலாவது தொழில்நுட்ப குழு கூட்டம் 2020 மார்ச் 11 ஆம் திகதி நடைபெற்றது. அதன் போது ஏற்பட்ட பிரச்சினைக்காக வனசீவராசிகள் | செயற்திட்டத்திற்குரிய சுற்றாடல் அறிக்கை கால ரீதியில் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | திணைக்களத்தின் அவதானிப்புக்கள் 2020 திசெம்பர் 07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மேலும், இந்த சுற்றாடல் அறிக்கையை வழங்குமாறு 02 மீள்நினைவூட்டல் கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டிருந்தன. எனினும், இதனை அங்கீகரிக்கும் நிறுவனமான வனபாதுகாப்பு திணைக்களத்தின் தொழில்நுட்ப குழுவின் பரிந்துரையோ அல்லது உரிய அங்கீகாரமோ இது வரை கிடைத்திருக்கவில்லை. | |
| (iii) | இந்த செயற்திட்டத்திற்காக செயற்திட்ட பணிப்பாளர் ஒருவரை உள்ளடக்கிய 27 பேர்களை உடைய பதவியணியினர் நியமிக்கப்பட்டு 2017 ஆம் ஆண்டு முதல் 2020 மே மாதம் வரை சம்பளம் செலுத்தி திருகோணமலை பிரதேசத்தில் செயற்திட்ட அலுவலகம் ஒன்று நடாத்திச் செல்லப்பட்டிருந்ததுடன், 2017 முதல் 2020 வரையான கால எல்லையில் ரூபா 135 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. | இந்த செயற்திட்டத்திற்காக முகாமைத்துவ சேவைகள் திணைக்களமிடமிருந்து கிடைத்த பதவியணியினர் அங்கீகாரத்தை அடிப்படையாகக் கொண்டு 27 உத்தியோகத்தர்களை உள்ளடக்கிய பதவியணியினர் ஒன்று செயற்திட்ட முகாமைத்துவ அலகிற்காக சேர்க்கப்பட்டிருந்தனர். இந்த செயற்திட்டம் எதிர்பார்க்காத காரணங்களினால் அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தமை அவதானிக்கப்பட்டது. உத்தேச களுகங்கை நீர்த்தேக்க நுழைவு வீதி கந்தளாய் சீனி கைத்தொழிற்சாலைக்குரிய பிரதேசம் ஊடாக செல்கின்றது. இதன் நுழைவு வீதி கந்தளாய் சீனி கம்பனியின் காணி ஊடாக செல்கின்றமையினால் அதற்கு எதிர்ப்பு தெரிவித்தமைக்காக பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சருடன் சில கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்ட போதும் வெற்றியளித்திருக்கவில்லை. இதற்காக நிதி அமைச்சர் அல்லது அரசாங்கத்தினால் கொள்கை ரீதியான தீர்மானம் | செயற்திட்ட பதவியணியினர்களினால் 04 வருட காலத்தில் இலக்கிடப்பட்ட நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு அமுல்படுத்தப்பட்ட முறையில் காணப்படுகின்ற குறைபாடுகளை இனங்கண்டு, எதிர்காலத்தில் இவ்வாறான நிலைமையினை தவிர்ப்பதற்கு தேவையான உள்ளக கட்டுப்பாட்டை வலுப்படுத்துதல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | ஒன்று எடுக்க வேண்டியிருந்தது. 2020 ஆம் ஆண்டின் போது தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் மூலம் (NPD) “அனுபவமுள்ள மூன்று நபர்கள் குழுவிற்கும்” சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அதன் போது தீர்மானம் ஒன்று எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த செயற்திட்டத்தை நிறுத்துதவற்கோ அல்லது அமுல்படுத்துவதில் உள்ள தாமதம் தொடர்பாகவோ நீர்ப்பாசன திணைக்களம் அல்லது நீர்ப்பாசன அமைச்சோ நேரடியான பொறுப்பினை எடுக்கவில்லை. அரசாங்கத்தினால் கொள்கை ரீதியான தீர்மானத்திற்கு வரவேண்டியுள்ள விடயமாக இருந்தமையை அவதானிக்கின்றோம். | |
| (iv) | செயற்திட்டத்தின் கீழ் நிறைவேற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்ட கிண்ணியா, கந்தளாய் பிரதேசத்தின் நீர்ப்பாசன குளங்களை நிர்மாணித்தல், 15 மீற்றர் இயலளவை உடைய களுகங்கை நீர்த்தேக்கத்தை நிர்மாணித்தல், 03 கால்வாய்களை நிர்மாணித்தல் மற்றும் நின்தரவேதி பிரதேசத்தில் புதிதாக 3000 ஏக்கர் காணியில் பயிரிடல் போன்ற பணிகளுக்காக காணி கைப்பற்றப்படாதிருந்ததுடன், 2020 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. மேலும் நிர்மாணிக்கப்பட்ட 02 கட்டிடங்களை நிர்மாணிக்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | கிண்ணியா, கந்தளாய் பிரதேசத்தில் புதிதாக 1,214 ஹெக்டேயர் காணி மற்றும் காணப்படுகின்ற 8,094 ஹெக்டேயர் காணி என்பவற்றிக்காக நீர்ப்பாசன நீரையும், பிரதேசத்தின் மக்களுக்கு தேவையான குடிநீரையும் வழங்கும் நோக்கத்தில் 15.5 MCM நீர்தேக்கமொன்று முன்மொழியப்பட்டிருந்தது, மேலும் பிரபல்யமான குளங்களை போசித்தல், சிங்க வெவ, சூரிய வெவ, காந்தி குளம், குரங்குபாஞ்ஞான் குளம், வெலே வெவ மற்றும் இன்னும் சிறிய இரண்டு குளங்களை போசிப்பதற்கும் இதன் மூலம் உத்தேசிக்கப்பட்டது. இந்த பணிகளுக்காக காணி கையேற்கப்படாதிருந்ததுடன், 2020 திசெம்பர் 31 ஆம் திகதி அளவில் செயற்திட்டம் கைவிடப்பட்டிருந்தது. நிர்மாணிக்கப்பட்ட 02 | இடைநடுவில் வேலைகள் நிறுத்தப்பட்டுள்ள கட்டிடங்களின் வேலைகளை பூர்த்தி செய்வதற்கும், ஆக்கபூர்வமான பணிகளுக்காக பயன்படுத்துவதற்கும் தேவையான தரப்பினருக்கு கையளிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கட்டிடங்களின் நிர்மாண நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்படாமல் கைவிடப்பட்டிருந்தது. | |
| (v) | உரிய இலக்குகளை சரியான பிரகாரம் நிறைவேற்றாமையின் காரணமாக எதிர்பார்த்த பிரகாரம் செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு முடியாதிருந்தமையால், அதன் மூலம் எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார மற்றும் சமூக நலன்களை பொது மக்களுக்கு வழங்க முடியாதிருந்தது. இதற்காக செலவிடப்பட்ட ரூபா 135 மில்லியன் கிரயம் சிக்கனமற்ற செலவினமாக இருந்தது. | -மேற்படி- | செயற்திட்டத்தை பூர்த்தி செய்து நோக்க நலன்களை மக்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்ததுடன், செயற்திட்டத்தை நிறுத்துவதற்கான காரணங்களை பரீட்சித்து தேவையான செயற்பாடுகளை எடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 3.4 உள்நாட்டு நிதியங்களில் இருந்து அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள்

-----------------------------------------------------------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கீழ் மல்வத்து ஓயா நீர்த்தேக்கத்திற்கான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிக்கும் நடவடிக்கைகள் 2013 ஆம் ஆண்டின் போது மஹாவலி மதியுரைச் சேவை பணியம் (தனியார்) கம்பனிக்கு கையளிக்கப்பட்டிருந்தது. அந்த நிறுவனத்தால் 2018 மே மாதம் சமர்ப்பிக்கப்பட்ட சுற்றாடல் மதிப்பீடு தொழில்நுட்ப குழுவினால் (EIA Tech Team) இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்ட | கீழ் மல்வத்து ஓயா நீாத்தேக்க செயற்திட்டத்திற்காக சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை தயாரிப்பதற்காக மஹாவலி மதியுரைச் சேவை பணியம் (தனியார்) கம்பனிக்கு 2013 ஆம் ஆண்டின் போது கையளிக்கப்பட்டிருந்தது. எனினும் அந்த கம்பனியால் இறுதி அறிக்கை 2018 மே மாதம் அளவில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அது மத்திய சுற்றடால் | சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை சரியான காலத்தில் மேற்கொள்ள வேண்டியிருந்ததுடன், அது தொடர்பாக எழுந்துள்ள பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | விடயங்கள் மற்றும் பிரதேசத்தில் காணப்பட்ட நிலைமைகளுக்கு இடையே பரஸ்பர வித்தியாசம் காணப்படுகின்றமை அவதானிக்கப்பட்டது. 02 சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது. | அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் நியமிக்கப்பட்ட சுற்றாடல் மதிப்பீட்டு தொழில்நுட்ப குழு (EIA Technical Team) கீழ் மல்வத்து ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்தின் கள அவதானிப்பினை மேற்கொண்டிருந்ததுடன், அதன் போது மஹாவலி மதியுரைச் சேவை பணியகம் (தனியார்) கம்பனியால் தயாரிக்கப்பட்ட சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட சில விடயங்கள் மற்றும் பிரதேசத்தில் காணப்படுகின்ற நிலைமைக்கு இடையே பரஸ்பர வேறுபாடுகள் காணப்படுகின்றமை வெளிப்படுத்தப்பட்டிருந்தது. | |
| (i) | வில்பத்து எல்லை அடையாளமிடப்பட்ட வனசீவராசிகள் திணைக்களத்திற்கு விடுவிப்பதற்கு இணங்கிய காணி மாத்திரம் உள்ளடக்கப்பட்டு மிகுதி தேவைகளுக்கான காணிகளுக்காக மாற்று காணிகளை கண்டறிந்து வனசீவராசிகள் மற்றும் வனபாதுகாப்பு திணைக்களங்களின் இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்ளல். | | |
| (ii) | வவுனியா மாவட்டத்தில் புதிய பயிர்ச்செய்கை காணிக்காக அடர்ந்த வன பிரதேசங்களுக்கு பதிலாக இலகுவான காட்டு பிரதேசங்களை இனங்கண்டு வனபாதுகாப்பு திணைக்களத்தின் இனக்கப்பாட்டை பெற்றுக் கொள்ளல் என்ற விடயங்கள் காண்பிக்கப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | கீழ் மல்வத்து ஓயா நீர்த்தேக்க செயற்திட்ட பரீட்சிப்பின் போது நீர்த்தேக்கத்திற்குரிய நிலப் பிரதேசம் தொடர்பான சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு ஆய்வு அறிக்கைக்காக மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அங்கீகாரம் | மேற்கூறப்பட்ட விடயங்களின் காரணமாக மத்திய சுற்றாடல் அதிகார சபையில் நடைபெற்ற சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு தொழில்நுட்ப குழுவின் கூட்டத்தின் போது பின்வரும் தீர்மானங்களுக்கு உடன்பட்டிருந்தது. | செயற்திட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னர் சுற்றாடல் தாக்க மதிப்பீட்டு அறிக்கை, காணி கையேற்றல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட |

பெற்றப்படாமை, நீர்த்தேக்கத்தின் கீழ் மூழ்குகின்ற 13,349 ஏக்கர் காணியை அளவிடும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருந்த போதிலும், அந்த காணியை கைப்பற்றுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாமை, நீர்த்தேக்க நிர்மாணம் காரணமாக தாக்கத்திற்கு உட்படுகின்ற குடும்பங்களுக்காக செலுத்த வேண்டிய இழப்பீடுகள் தொடர்பாக இணக்கப்பாட்டிற்கு வந்திருக்காமை, அந்த குடும்பங்களை மீள் குடியமர்த்துவதற்கு இனங்காணப்பட்ட பரிதேசத்தில் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்து நிலக்கூறுகளை பகிர்ந்தளிப்பற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்படாமை, நீர்த்தேக்க நிர்மாணத்தை ஆரம்பிப்பதற்காக தேவையான அடிப்படை நடவடிக்கைகளை பூர்த்தி செய்யாமை, கீழ் மல்வத்து ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்திற்காக 2019 ஆகஸ்ட் 30 ஆம் திகதி அடிக்கல் வைத்தமைக்காக ஒழுங்கமைக்கப்பட்ட விழாவிற்காக ரூபா 22,088,598 தொகை செலவிடப்பட்டமை போன்ற குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) வில்பத்து எல்லை அடையாளமிடப்பட்ட வனசீவராசிகள் திணைக்களத்திற்கு விடுவிப்பதற்கு இணங்கிய காணி மாத்திரம் உள்ளடக்கப்பட்டு மிகுதி தேவைகளுக்கான காணிகளுக்காக மாற்று காணிகளை கண்டறிந்து வனசீவராசிகள் மற்றும் வனபாதுகாப்பு திணைக்களங்களின் இணக்கப்பாட்டை பெற்றுக் கொள்ளல்.

(ii) வவுனியா மாவட்டத்தில் புதிய பயிர்ச்செய்கை காணிக்காக அடர்ந்த வன பிரதேசங்களுக்கு பதிலாக இலகுவான காட்டு பிரதேசங்களை இனங்கண்டு வனபாதுகாப்பு திணைக்களத்தின் இனக்கப்பாட்டை பெற்றுக் கொள்ளல் என்ற விடயங்கள் காண்பிக்கப்பட்டிருந்தன.

எவ்வாறாயினும் 2020 யூன் மாதம் வரையிலும் செயற்திட்டத்திற்காக தேவையான சுற்றாடல் அங்கீகாரத்தை வழங்குவதற்கு தேவையான சகல அறிக்கைகள் மற்றும் உரிய நிறுவனங்களின் பரிந்துரைகள் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. எனினும், இந்த அங்கீகாரம் 2021 சனவரி 20 ஆம் திகதிய கடிதத்தின் மூலமே கிடைத்திருந்தது. மேலும் சுற்றாடல் அங்கீகாரம் பெறப்படும் வரை செயற்திட்டத்தின் நடவடிக்கைகளைச் செய்வதற்கு சட்ட ரீதியான அனுமதியொன்று காணப்படாதிருந்தமையால்

வேண்டும்.

‘‘தேசிய சுற்றாடல் பாதுகாப்பிற்கான தொழிற்சங்கங்களின் கூட்டு’’ இனாலும் மத்திய சுற்றாடல் அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டிருந்ததுடன், அவர்களும் அதற்காக சட்ட ரீதியான நடவடிக்கைகளை எடுப்பதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

**<u>நீர்த்தேக்கத்திற்கு அடிக்கல் நட்டுதல்</u>**

கீழ் மல்வத்து ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு தேவையான அமைச்சரவை அங்கீகாரம் 2009 ஆம் ஆண்டு வழங்கப்பட்டிருந்தும், அதன் பின்னர் திருத்தப்பட்ட மதிப்பீட்டு செலவினங்களின் கீழ் அமுல்படுத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் 2016 ஆம் ஆண்டில் கிடைத்திருந்தது.

2019 ஆகஸ்ட் மாதம் வரையில் சுற்றாடல் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்காக தேவையான பரிந்துரைகள் தொல்பொருளியல் திணைக்களம் மற்றும் வனசீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் என்பற்றில் இருந்து கிடைத்திருக்கவில்லை. பரிந்துரையின் தேவை வனபாதுகாப்பு திணைக்களத்தில் இருந்து மாத்திரமே மிகுதியாக கிடைக்க வேண்டியிருந்தது.

இந்த செயற்திட்டத்தை விரைவாக ஆரம்பிக்கும் தேவை அரசாங்கத்திற்கு காணப்பட்டதுடன், 2019 ஆகஸ்ட் 06 ஆம் திகதி விவசாய அமைச்சில்

நடைபெற்ற கூட்டத்தின் போதும் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிரகாரம்,

(i) கீழ் மல்வத்து ஓயா நீர்த்தேக்க செயற்திட்டத்திற்காக கோரப்பட்ட வன பாதுகாப்பு திணைக்களத்திற்குரிய காணியினை விடுவிக்கும் கடிதம் 2019 ஆகஸ்ட் 09 ஆம் திகதிக்கு முன்னர் வனபாதுகாப்பு திணைக்களத்தினால் விநியோகித்தல்.

(ii) இந்த கடிதம் சமர்ப்பிக்கப்பட்டதன் பின்னர் மத்திய சுற்றாடல் அதிகார சபையினால் செயற்திட்டத்திற்கு சுற்றாடல் அங்கீகாரம் 2019 ஆகஸ்ட் 20 ஆம் திகதிக்கு முன்னர் வழங்குதல்.

அதன் பிரகாரம் வனபாதுகாப்பு மற்றும் மத்திய சுற்றாடல் அதிகார சபை என்பவற்றின் இணக்கப்பாட்டின் அடிப்படையில் கீழ் மல்வத்து ஓயா நீர்த்தேக்கத்திற்காக அடிக்கள் நட்டும் விழா 2019 ஆகஸ்ட் 30 ஆம் திகதி அதிமேதகு சனாதிபதியின் தலைமையில் மேற்கொள்வது உறுதிப்படுத்தப்பட்டிருந்தது.

**விழாவிற்காக செலவினங்களை செய்தல்**

**------------------------------------**

2019 ஆம் ஆண்டில் கணிசமான தொகையொன்று ஒதுக்கப்படாதிருந்த போதும், ஏனைய செயற்திட்டங்களில் எஞ்சியிருந்த நிதி ஏற்பாடுகள் இந்த செயற்திட்டத்திற்கு மாற்றும்

| | | |
|---|---|---|
| | இயலுமை உள்ளமையினால் அடிக்கல் நட்டும் தினம் முதல் நிர்மாண நடவடிக்கைகளை நடாத்திச் செல்லும் நோக்கில் 2019 ஆகஸ்ட் 30 ஆம் திகதி அடிக்கல் நட்டுதல் இடம் பெற்றிருந்தது. உத்தேச விழா அதிமேதகு சனாதிபதியின் தலைமையிலும், கௌரவ பிரதமர் உள்ளடங்கிய அரசாங்கத்தின் அமைச்சர்கள் கணிசமான தொகையினரின் பங்குபற்றலுடனும் நடைபெற்ற தேசிய விழாவாக இருந்தமையால் சனாதிபதி மற்றும் பிரதமரின் பாதுகாப்பு பிரிவுகளினதும் இணக்கப்படாட்டுடன் ஒழுங்கமைக்கப்பட வேண்டியிருந்தமையாலும், உரிய நியமங்களில் வைக்கப்பட வேண்டி இருந்தமையினாலும் அந்த விழாவிற்காக கணக்காய்வு ஐயவினாவில் குறிப்பிடப்பட்ட பணமொன்று செலவிடப்பட்டிருந்தது. | |

**3.5 எதிர்பார்த்த பூர்த்தி மட்டங்கள் பெறப்படாமை**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) **காலநிலை மாற்றத்தை எதிர்கொள்ளும் முன்னேற்றச் செயற்திட்டம்** | | |

(i) மன்னார் யோதகுளத்தில் இடது கரை வாய்க்கால் கட்டின் இரு பக்கமும் புற்பிடி வைத்து அபிவிருத்தி செய்தற்காக ரூபா 4,544,430 தொகை செலுத்தப்பட்டிருந்தது. பௌதீக பரிசோதனையின் பிரகாரம் ஒப்பந்தகாரரினால் குறித்துரைத்த பிரகாரம் கால்வாய் சுவரின் இரு பக்கமும் புற்பிடி பதிக்கப்படாதிருந்ததுடன், அதன் காரணமாக சுவரின் இரு பக்கமும் கழுவப்பட்டு வெறிச்சோடிக் காணப்பட்டிருந்தது. மேலும் சுவரின் மேற்பகுதியில் 4 மீற்றர் அகலத்தில் நிர்மாணிக்கப்பட வேண்டியதாக காணப்பட்ட போதிலும், மேற்பகுதியின் கீழ் குறித்த அளவில் நிர்மாணிக்கப்படாதிருந்ததுடன் , பல்வேறு அளவுகளில் காணப்பட்டது. அதன் காரணமாக கட்டிற்கு இழப்பு ஏற்படுவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தது.

இந்த ஒப்பந்தம் 2017 மார்ச் மாதம் ஆரம்பிக்கப்பட்டு 2018 மார்ச் மாதம் பூர்த்தி செய்யப்பட வேண்டியிருந்தமையும், ஒப்பந்தத்தின் வேலைகள் பூர்த்தி செய்யப்பட்டு 03 வருட அளவிலான காலம் கடந்திருந்தமையால் மன்னார் பிரதேசத்தில் காணப்பட்ட அதிக வரட்சியின் காரணமாக இடையிடையே புற்பிடிகள் உலர்ந்து அழிவடைந்திருந்ததுடன் மேலும் இந்த பிரதேசத்தில் மாடுகள் மற்றும் ஆடுகள் மற்றும் மீன் பிடி கைத்தொழில்கள் மேற்கொள்ளப்படுகின்றமையி னால் இந்த கால்வாய் கடம்டின் இருபக்கத்திற்கும் இழப்பு ஏற்பட்டிருந்ததாக மன்னார் நீர்ப்பாசன பணிப்பாளரினால் தெரிவிக்கப்பட்டிருந்தது. மாடுகள் மற்றும் ஆடுகள் கட்டில் பிரயாணம் செய்வதன் மூலம் கால்வாய் கட்டிற்கு இழப்பு ஏற்படுவதுடன் இந்த இழப்பை தடுத்துக் கொள்ள முடியாதிருந்ததாகவும், வருடாந்த நீர்ப்பாசன திணைக்களத்தின் மூலம் பராமரித்து செல்லும் நடவடிக்கைகளுக்காக வழங்கப்படுகின்ற நிதி ஏற்பாட்டின் கீழ் இந்த இழப்பீட்டிற்கு உட்பட்ட பகுதியை பழுதுபார்த்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் நீர்ப்பாசன பணிப்பாளரினால் அறிவிக்கப்பட்டுள்ளது.

திட்டமிடப்பட்ட பிரகாரம் நிர்மாணங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| (ii) மன்னார் வெள்ளக்கம்பு நீர்த்தேக்க குளக்கட்டை நிர்மாணிப்பதற்கான மண் அந்த இடத்தில் இருந்து 1.2 கிலோ மீட்டர் தூரத்தில் போக்குவரத்து செய்ய வேண்டியிருந்தமை ஆரம்ப மதிப்பீட்டில் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் ஒப்பந்தகாரரால் குள அணையை நிர்மாணிப்பதற்குத் தேவையான மண் குளத்தின் உள்ளிருந்து பெறப்பட்டிருந்தது. மேலும் குளக்கட்டில் புற்பதித்தலுக்காக வேலை விடயம் 6.4 இன் கீழ் ரூபா 659,214 தொகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்த போதிலும் அந்த வேலை விடயங்கள் எதுவும் நிறைவேற்றப்படாமல் ஒப்பந்தம் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. | குளத்தின் உள்ளிருந்த மண் பொறியியலாளர் ஆய்வுகூடத்தில் பரிட்சிக்கும் போது குளக் கட்டிற்காக பொருத்தமாக இருந்தமை உறுதிப்படுத்தப்பட்டமையினால் குள அணைக்காக ஈடுபடுத்தப்பட்டதாக மன்னார் நீர்ப்பாசன பொறியியலாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது. குளக்கட்டில் புற்பிடி பதிக்கும் பணிகள் ஒப்பந்தகாரரினால் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் உலர் வலயத்தில் நீர் இட்டு புற்பிடிகள் பாதுகாக்கபடாதிருந்தமையினால் புற்பிடிகள் உலர்ந்து அழிவடைந்திருந்தமையினால் அதற்காக கொடுப்பனவு செய்யப்படவில்லையென மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. | திட்டமிடப்பட்ட பிரகாரம் செயற்திட்ட செயற்பாடுகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. மனித வள முகாமைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் அமைச்சின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் 179 ஆக இருந்ததுடன் உள்ளபடியான பதவியணியினர் 139 ஆகும். அதன் பிரகாரம் சிரேஷ்ட நிலையில் 09 பதவிகளும், மூன்றாம் நிலையில் 02 பதவிகளும், இரண்டாம் நிலையில் 27 பதவிகளும் மற்றும் ஆரம்ப நிலையில் 02 பதவிகளும் ஆக 40 வெற்றிடங்கள் காணப்பட்டன. அவற்றை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | மீளாய்வாண்டில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரை நிரப்புவதற்காக உரிய நிறுவனத்துக்கு கோரிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. சிரேஷ்ட நிலையில் தற்போது காணப்படுகின்ற 09 வெற்றிடங்களுக்கு இடையே அதிகமாக இலங்கை பொறியியல் சேவைக்குரியதாக இருந்ததுடன் அதற்காக பொறியியலாளர் சேவை சபையினால் பரீட்சை நடாத்தி ஆட்சேர்ப்பதற்கு உரிய அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. அங்கீகாரம் கிடைத்ததன் பின்னர் உரிய | பதவிகளின் தேவை மீளாய்வாய்வு செய்யப்பட்டு பதவியணியினர் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

வெற்றிடங்களை நிரப்புவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது. மேலும் இரண்டாம் நிலையில் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளை உள்ளடக்கிய மேலும் கணிசமான பதவிகள் தற்போது அரச நிர்வாக அமைச்சினால் நிரப்பப்பட்டுள்ளது.